இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 25-07-2023

# கருணை வடிவிலான அரசு

முதியோர் உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியங்களை உயர்த்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இப்போது 1000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இனி 1,200 ரூபாய் வழங்கப்பட இருக்கிறது. 12 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க.வின் 10 ஆண்டு கால ஆட்சியில் உயர்த்தித் தரப்படவில்லை. கருணை வடிவிலான முதலமைச்சர் இதனை உயர்த்தி வழங்கி உள்ளார்.

கொரோனா பரவிய போது தமிழ்நாட்டில் பழனிசாமியின் அ.தி.மு.க. ஆட்சி இருந்தது. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுங்கள் என்று தளபதி ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். கடைசி வரைக்கும் பழனிசாமி தரவில்லை. நாம் ஆட்சிக்கு வந்ததும் முதலில் 2 ஆயிரம், பின்னர் 2 ஆயிரம் வழங்கினார் முதலமைச்சர் அவர்கள். முதலில் 22 மளிகைப் பொருட்களையும் - பின்னர் 14 மளிகைப் பொருள்களையும் வழங்கினார் முதலமைச்சர் அவர்கள். கொரோனாவை வென்றவர் மட்டுமல்ல - கொரோனாவால் வாழ்வாதாரம் இழந்த மக்களின் வாழ்க்கையையும் மீட்டுத் தந்தவர் தான் முதலமைச்சர் அவர்கள்.

அதன்பின்னர் ஏழை எளிய மகளிர் பயன்பெறும் வகையில் கட்டணமில்லா பேருந்து பயணத்தை ஏற்பாடு செய்து கொடுத்தார் முதலமைச்சர். மாதத்துக்கு 800 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரை பெண்களால் சேமிக்க இந்தத் திட்டம் காரணமாக இருக்கிறது.

ஐந்து பவுன் வரை நகைக்கடன் வைத்துள்ள பதிமூன்றரை லட்சம் பேருக்கு நகைக்கடனை ரத்து செய்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால் கொடுத்த மிக முக்கியமான வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வியை முடித்து கல்லூரிக் கல்விக்குச் செல்ல முடியாத அரசுப் பள்ளி மாணவியர்க்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டத்தை தொடங்கி வைத்தார் முதலமைச்சர். இது ஏழை எளிய மாணவியர்க்கு பயனுள்ளதாக உள்ளது.

காலை உணவு வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி உள்ளார். இது அறிவுப்பசியைப் போக்குவதற்கு முன்னதாக கல்விப் பசியைப் போக்குவதாக அமைந்துள்ளது.

**மகளிர் நலனையும், அவர்களது மேம்பாட்டினையும் கருத்தில் கொண்டு செயல்படுத்திக் காட்டிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களது அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையிலும், அவரது நூற்றாண்டு விழாவிற்கு மேலும் பெருமைச் சேர்க்கும் விதத்திலும் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்திற்கு "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.**

**உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையில் (Global Gender Gap Report 2023), தரவரிசைப்படுத்தப்பட்ட 146 நாடுகளில், இந்தியா 127-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது என்பதும் மிகவும் கவலைக்குரிய செய்தியாகும்.**

**இதற்கு முக்கிய காரணமாக பெண்களின் பொருளாதார நிலைமையும், கல்வி நிலையுமே உள்ளன. இந்த இரு காரணங்களால் முன்னேற்றம் காணாமல் சமூகத்திலும், குடும்பங்களிலும் மகளிர் உரிய அங்கீகாரம் பெற இயலாது. இல்லறப் பொறுப்புகளுடன் பணிகளுக்குச் சென்று, அதன் மூலம் தங்கள் குடும்பங்களின் உயர்வுக்கு உழைத்து வரும் மகளிரின் உழைப்பை முறையாக அங்கீகரிக்க வேண்டும். இதற்காக ஒரு கோடி மகளிருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் கொடுக்கப் போகிறார் முதலமைச்சர். பெண்களின் உழைப்புக்கான அங்கீகாரத்தை அரசு வழங்குகிறது. இதன் மூலமாக பொருளாதார வளத்தை மட்டுமல்ல; சமூக மரியாதையையும் மகளிர் பெறுவார்கள். செப்டம்பர் 15 பேறறிஞர் அண்ணா பிறந்த நாளில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடங்க உள்ளது.**

இதனுடன் முதியோர் ஓய்வூதியத்தையும் உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாடு அமைச்சரவையில் எடுக்கப்பட்ட இந்த முடிவை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தற்போது இந்திராகாந்தி தேசிய ஓய்வூதிய திட்டத்தின்கீழ் இந்திரா காந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம், இந்திரா காந்தி விதவையர் ஓய்வூதியத் திட்டம், மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்றோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்றோர் / கணவரால் கைவிடப்பட்டோர் ஓய்வூதியத் திட்டம், 50 வயதிற்கும் மேற்பட்ட திருமணம் ஆகாத ஏழை பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம், இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1962ஆம் ஆண்டில் மாதம் 20 ரூபாயாக இந்த ஓய்வூதியத் திட்டம் தொடங்கப்பட்டது. படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்போது ரூபாய் 1,000 மாத ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு கடந்த 1-1-2023 முதல் 1,000 ரூபாயாக வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம் 1,500 ரூபாயாக உயர்த்தி முதலமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர முதியோர் உதவிப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பயன்பெறுபவர் களுக்கும் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட பல்வேறு சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 30,55,857 பயனாளிகள் மாதாந்திர ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

**பல்வேறு ஓய்வூதியங்கள் பெற்றுவருபவர்களின் வாழ்வாதார மற்றும் சமூக நிலையை கருத்தில் கொண்டு இந்த ஓய்வூதியத்தை ரூபாய் 1,000-லிருந்து ரூபாய் 1,200-ஆக உயர்த்தி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இத்துடன் ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பித்து காத்திருப்போர் பட்டியலில் உள்ள 74,073 நபர்களில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.**

**30 லட்சம் பேருக்கு உதவப் போகும் அறிவிப்பாக இது அமைந்துள்ளது. இதனை விட முதலமைச்சரின் கருணை உள்ளத்துக்கு ஆதாரம் தேவையில்லை.**

## தருமபுரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

# விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**தருமபுரி, ஜூலை 25- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.7.2023) தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களை பதிவு செய்யும் முகாமை தொடங்கி வைத்தார்.**

மேலும், விண்ணப்பங்களைப் பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, விண்ணப்பம் செய்ய வந்த மகளிருடன் கலந்துரையாடினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.7.2023) தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களை பதிவு செய்யும் முகாமை தொடங்கி வைத்து, விண்ணப்பங்களைப் பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் – 1 நா. முருகானந்தம், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி.சாந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நிதிநிலை அறிக்கையில் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் பற்றிய அறிவிப்பு!**

தமிழ்நாடு அரசின் 2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, **தகுதி வாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்படும்!** வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் என சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய் தமிழ் நாட்டின் தலைமகன் - பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும். தமிழ்நாட்டு மகளிரின் சமூக பொருளாதார வாழ்வில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக் கூடிய இத்திட்டத்திற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 7,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று அறிவிக்கப்பட்டது.

**மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதல்வர் அவர்களின் விளக்கம்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.3.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து அளித்த விளக்கத்தில், "மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்" இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது, தேவைப்படும் குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும்சிறுதொழில்நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் என பல்வேறு வகைகளில் தங்கள் விலை மதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுவார்கள் என்றும், இந்த மகத்தான 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்று அறிவித்தார்.

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!**

பெண்களுக்கு சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளிலும் இடஒதுக்கீடும் வழங்கி பெண்ணுரிமை காத்திட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று இத்திட்டத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைச் சீரிய முறையில் செயல்படுத்திட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் ஒவ்வொரு துறைகளின் பங்களிப்பு குறித்தும், மாவட்ட நிர்வாகத்தின் பொறுப்புகள் குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 7.7.2023 அன்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசுத் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயன் அடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும். அவர்களிடம் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற தரவுகள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்கு உரிய வழிவகை செய்து, இந்த மகளிர் உதவித் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவி புரிய வேண்டும் என்று தெரிவித்ததோடு, எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டு விடக் கூடாது என்று அறிவுறுத்தினார்.

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியுடையோர்!**

ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு பயனாளி மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியானவர். குடும்ப அட்டையில் பெயர் இடம் பெற்றுள்ளவர்கள் அனைவரும் ஒரு குடும்பமாகக் கருதப்படுவர். ஒவ்வொரு தகுதிவாய்ந்த குடும்பத்திலும் உள்ள குடும்பத்தலைவி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கலாம்.

குடும்ப அட்டையில் குடும்பத்தலைவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பெண் குடும்பத் தலைவியாகக் கருதப்படுவார். குடும்ப அட்டையில் ஆண் குடும்பத் தலைவராகக் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்தக் குடும்பத்தலைவரின் மனைவி குடும்பத்தலைவியாகக் கருதப்படுவார். குடும்ப அட்டையில் ஆண் குடும்பத்தலைவரின் மனைவியின் பெயர் ஏதேனும் காரணத்தினால் இல்லாதபட்சத்தில், குடும்பத்திலுள்ள குடும்பத் தலைவியாக இதர பெண்களில் ஒருவர் கருதப்படுவார். ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட 21 வயது நிரம்பிய பெண்கள் இருந்தால், இத்திட்டத்தின்கீழ் பயன்பெற, ஒரு நபரைக் குடும்ப உறுப்பினர்கள் தேர்வு செய்து விண்ணப்பிக்கச் செய்யலாம்.

மேலும், திருமணமாகாத தனித்த பெண்கள், கைம்பெண்கள் மற்றும் திருநங்கைகள் தலைமையில் குடும்பங்கள் இருந்தால் அவர்களும் குடும்பத் தலைவிகளாகக் கருதப்படுவர்.

**பொருளாதாரத் தகுதிகள்!**

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கும் குடும்பங்களின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு கீழ் இருக்க வேண்டும், ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நன்செய் நிலம் அல்லது பத்து ஏக்கருக்குக் குறைவாகப் புன்செய் நிலம் வைத்திருக்க வேண்டும், வீட்டு உபயோகத்துக்கு ஆண்டிற்கு 3600 யூனிட்டிற்கும் குறைவாக மின்சாரம் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்தும் முறை!**

இத்திட்டத்திற்கு விண்ணப்பதாரர்கள் தங்கள் குடும்ப அட்டை இருக்கும் நியாயவிலைக் கடை அமைந்திருக்கும் விண்ணப்பப் பதிவு முகாமில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பொது விநியோக நியாய விலைக் கடை பணியாளரும் தங்களது பகுதியில்உள்ளகுடும்பங்களுக்கு ஒவ்வொரு தெருவாரியாக நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பத்தினை வீடுகளுக்குச் சென்று வழங்கி வருகின்றனர். ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும் விண்ணப்பங்களில் டோக்கன் எண், பயனாளிகள் முகாமிற்கு வருகை புரிய வேண்டிய தேதி மற்றும் நேரம் குறிப்பிட்டு வழங்கப்படும்.

அக்குறிப்பிட்ட நாளில் முகாமிற்கு வருகை தரும் விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இதற்கெனத் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்டுள்ள கைப்பேசி செயலி வழியாக நேரடியாக பதிவு செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் முகாமிற்கு வரும்பொழுது ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம், மின்வாரிய கட்டண இரசீது ஆகியவற்றை அசலாக சரிபார்த்தலுக்கு கொண்டு வர வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவு செய்தவுடன் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதற்கான தகவல் விண்ணப்பதாரருக்கு கைப்பேசி வழியாக குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்படும். பதிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் மின்னணு முறையில் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டவுடன் அது தொடர்பான தகவல் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படும். திட்டம் தொடங்கப்பட்டவுடன் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் பலனாக அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

**தருமபுரியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்ப பதிவு முகாம் தொடங்கி வைத்தல்!**

தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, அவ்விண்ணப்பங்களைப் பயோ- மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, விண்ணப்பம் செய்ய வந்த மகளிருடன், அவர்கள் மேற்கொண்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்து, கலந்துரையாடினார். பின்னர், அங்கு நடைபெற்ற மக்களைத் தேடி மருத்துவம் முகாமினை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தருமபுரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட விண்ணப்பம் பெறும் முகாம்கள் இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. முதற்கட்டமாக 24.07.2023 முதல் 4.08.2023 வரை நல்லம் பள்ளி, கடத்தூர், காரிமங்கலம், மொரப்பூர் மற்றும் பாலக்கோடு ஆகிய வட்டாரங்களில் உள்ள 494 நியாய விலைக்கடைகளை உள்ளடக்கிய 2,21,484 குடும்ப அட்டைதாரர்களுக்குச் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இரண்டாவது கட்டமாக 5.08.2023 முதல் 16.08.2023 வரை தருமபுரி, ஏரியூர், அரூர், பென்னாகரம் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரங்களில் உள்ள 554 நியாய விலைக்கடைகளை உள்ளடக்கிய 2,47,111 குடும்ப அட்டைதாரர்களுக்குச் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் டி.என்.வி.எஸ். செந்தில்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே. மணி, எஸ்.பி. வெங்கடேஸ்வரன், இரா. ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் பி. பழனியப்பன், வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர்-1 நா. முருகானந்தம், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி. சாந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.